# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2293/66 - 2022 අගෝස්තු මස 19 වැනි සිකුරාදා - 2022.08.19

*2293/66 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ் முசலி பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

முசலி பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, இறப்பெய்தியமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், முசலி பிரதேச சபையின் இலக்கம் 07 - பொற்கேணி வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட ஜபறுல்லாகான் பாயிஸ் என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான முசலி பிரதேச சபையின் இலக்கம் 07 - பொற்கேணி வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரினால் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக சதக்கத்துல்லா அப்துல் ரகுமான் என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

1A - G 37284 — 16 (2022/08)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

முசலி பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான க. விமலரூபன் ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு சதக்கத்துல்லா அப்துல் ரகுமான் என்பவர் முசலி பிரதேச சபையின் இலக்கம் 07 - பொற்கேணி வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**க. விமலரூபன்,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
முசலி பிரதேச சபை.

மாவட்ட தேர்தல்கள் அலுவலகம்,
மன்னார்,
2022, ஓகத்து 19.

EOG 08-0179

---

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ் கட்டானை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கட்டானை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவி, கட்சி உறுப்புரிமை இல்லாதொழிந்தமை காரணமாக வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும்;

மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 66அ(1)(அ) ஆம் பிரிவின் கீழ், கட்டானை பிரதேச சபையின் இலக்கம் 03 - அத்கால வட்டாரத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மர்வின் லெஸ்லி பீரிஸ் ஜெரமியஸ் புள்ளே என்பவர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய தேசியக் கட்சி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட் காலக்கெடுவுக்குள் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) 9 ஆம் பிரிவின் கீழ் தகைமையுடைய வேட்பாளரொருவராக, உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியை சேர்ந்தவருமான கட்டானை பிரதேச சபையின் இலக்கம் 03 - அத்கால வட்டாரத்தின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும்;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் அவ் வெற்றிடத்தை நிரப்புவதற்காக ஜயசூரிய குரனகே மேரி கீதானி பெரேரா என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும்;

கட்டானை பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலரான கருணாசிங்ஹ ஜயரத்னகே சம்பத் மாதவ ஆகிய நான், உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயமான) 66அ(1)(அ) என்னும் பிரிவின் நியதிகளின் படி செயற்பட்டு ஜயசூரிய குரனகே மேரி கீதானி பெரேரா என்பவர் கட்டானை பிரதேச சபையின் இலக்கம் 03 - அத்கால வட்டாரத்தின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

**கே. ஜே. எஸ். மாதவ,**
தெரிவத்தாட்சி அலுவலர்,
கட்டானை பிரதேச சபை.

மாவட்ட தேர்தல்கள் அலுவலகம்,
கம்பஹா,
2022, ஓகத்து 19.

EOG 08-0180

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.